**தலைப்பு 270 – அம்பாறை மாவட்ட செயலகம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்று, மாவட்ட செயலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணைக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் செயலகத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 270 – அம்பாறை மாவட்ட செயலகத்தினால் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018

ஜூலை 31 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அம்பாறை மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தி முதல் 2.16 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது | 1. கட்டுநிதி மதிப்பீடு தயாரித்தலில் குறைபாடுகள். | 2.12(i,ii,iii) |
| | | 2. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.14 |
| | | 3. செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள செய்பணிகளை நிறைவேற்றப்படாமை | 2.3(அ) |
| | | 4. செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் கைவிடல் | 2.3(ஆ) |
| | | 5. செயற்திட்டங்கள் பூர்த்தி | 2.3.1(இ) |

| | | | |
|---|---|---|---|
| | நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | செய்யாது கைவிடல் | |
| | | 6. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.3(ஈ) |
| | | 7. பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், செயன் முன்னேற்றம் அடையாத செயற்திட்டங்கள் | 2.3(உ)<br>2.4 |
| | | 8. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.7 |
| | | 9. பதவியணியின் இணைவதில் குறைபாடுகள் | 2.10 |
| | | 10. ஏனைய அமைச்சுக்கு வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துவதில் பலவீனங்கள் | |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனைய மேலதிக ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடைபிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும், | 1. இணக்கமின்மை | 2.15 |
| | | 2. பொது வைப்புக் கணக்கு | 2.13 |
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | சொத்துக்கள் முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.5 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | கட்டுநிதி மதிப்பீடு தயாரிப்பதில் குறைபாடு | 2.12 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டணங்கள் ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோ கத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தவை விரைவு படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு தனக்கு அறிவிப்பதாகவும், | நிலுவைக் கடன் மீதி | 2.11 |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் (இங்கு சிக்கனம் என்பதால் கருதப்படுவது மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்வதல்ல, செலவிடப்பட்ட பணத்தின் மூலம் அரசிற்கு உயர்ந்த பெறுமதி கிடைக்கப்பெறுவதை உறுதிப்படுத்துதல்) | 1. தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வு பந்திகள் | 2.8 |
| | | 2. முகாமைத்துவ பலவீனங்கள் | 2.9 |
| | | 3. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.6 |
| | | 4. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.7 |

## 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செய்பணிகள்

- மாவட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி ஒன்றினை உறுதிப்படுத்துவதற்காக மாவட்ட அபிவிருத்தி திட்டம், செயற்திட்டங்களை திட்டமிடல், செயற்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செயற்திடட்டங்களின் மேற்பார்வை

- மாவட்ட விவசாயத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் உலக உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துதல்

- பிரதேச செயலக முறைமையை சிறந்த முறையில் மக்கள் விரும்பும் விதத்தில் செயற்திறனுடன் நடாத்திச் செல்லல் மற்றும் பிரதேச செயலாளர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்

- மாவட்ட அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் அனர்த்த உதவி மேற்கொள்ளல்

- நியதிச் சட்டக் கடமையை நிறைவேற்றுதல்

- பல்வேறு இன மற்றும் மதங்களை சேர்ந்த மக்களிடையே நல்லிணக்க மற்றும் சகவாழ்வு ஏற்படுத்துவதற்காக தேவையான செயற்பாடுகளை வழங்குதல்.
- அரசின் பிரதான முகவராண்மையாக செயற்படுதல் மற்றும் அரச விழாக்களை ஒழுங்குபடுத்துதல்.

- உத்தியோகத்தர்களின் மனப்பாங்கு மற்றும் திறமைகள் மற்றும் இயலுமைகளை அபிவிருத்தி செய்தல்.

- மாவட்டத்தில் உள்ள அனைத்து நிறுவனங்களிடையே சிறந்த கூட்டிணைப்பு ஒன்றினை பேணல்.

## 2.2 மாவட்ட செயலகத்தின் கீழ் காணப்படும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய செய்பணிகள்

---

மாவட்ட செயலகத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் செய்பணிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| மாவட்ட செயலகத்தின் கீழ் காணப்படும் நிறுவனங்கள் | நிறுவுவதற்கான அதிகாரம் | செய்பணிகள் |
|---|---|---|
| i. அம்பாறை பிரதேச செயலகம்<br>ii. அக்கரைப்பற்று பிரதேச செயலகம்<br>iii. அட்டாளச்சேனை பிரதேச செயலகம்<br>iv. ஆலயடிவேம்பு பிரதேச செயலகம்<br>v. தமன பிரதேச செயலகம்<br>vi. தெஹஅத்தகண்டிய பிரதேச செயலகம்<br>vii. இறக்காமம் பிரதேச செயலகம்<br>viii. கல்முனை(தமிழ்) பிரதேச செயலகம்<br>ix. கல்முனை(முஸ்லிம்) பிரதேச செயலகம்<br>x. காரைத்தீவு பிரதேச செயலகம்<br>xi. லாஹுகல பிரதேச செயலகம்<br>xii. மஹஓயா பிரதேச செயலகம்<br>xiii. நாவிதன்வேலி பிரதேச செயலகம்<br>xiv. நிந்தவூர் பிரதேச செயலகம்<br>xv. பதியதலாவ பிரதேச செயலகம்<br>xvi. பொதுவில் பிரதேச செயலகம்<br>xvii. சம்மாந்துறை பிரதேச செயலகம்<br>xviii. சாய்ந்தமருது பிரதேச செயலகம்<br>xix. திருக்கோவில் பிரதேச செயலகம்<br>xx. உஹன பிரதேச செயலகம் | 1992 இன் 58 ஆம் இலக்க பிரதேச செயலகங்களை நிறுவும் சட்டம் | 1. அனைத்து வரிசை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் சட்டரீதியான ஏற்பாடுகளும் அனைத்து கருமங்களை ஒன்றிணைப்பதன் மூலம் மக்கள் நலனோம்பு மற்றும் அபிவிருத்தி கருமங்களை மேம்படுத்துதல்.<br>2. பிரதேசசத்தின் அனைத்து காணிகள் தொடர்பான அலுவல்கள்<br>3. வனப் பாதுகாப்பு, வன சீவராசிகள், மது வரி, மோட்டார் வாகனம், புவிச்சரிதவியல் சுரங்கம் தோண்டுதல், நீர்பாசனம், தேர்தல்கள் ஆட்கள் பதிவு செய்யும் திணைக்களங்கள் ஆகிய சட்டங்களின் மூலம் சாட்டப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுதல்.<br>4. பிரதேசத்தில் சமூக அபிவிருத்தி அலுவல்களை நடாத்துதல் மற்றும் அனர்த்த முகாமையுடன் தொடர்புடைய கருமங்களை நிறைவேற்றுதல்.<br>5. பதிவாளர் கடமை அலுவல்கள்<br>6. அரச வருமானம் மற்றும் நிதி அலுவல்கள் தொடர்பான கட்டுப்பாடு மற்றும் செயற்படுத்துதல் |

## 2.3 செயலாற்றுகை

**செய்பணிகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள செய்பணிகளை மேற்கொள்ளாமை**

செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ளவாறு உள்நாட்டு விவகார அமைச்சினால் மாவட்ட செயலகத்தின் மற்றும் 05 பிரதேச செயலகங்களின் கட்டிடங்கள் நிர்மாணிக்கும் வேலைகளுக்காக ரூபா 65 மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவற்றில் தமன பிரதேச செயலகத்தின் நிர்மாணிக்கும் வேலை ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், அதற்காக ஒதுக்கியிருந்த ரூபா 18.52 மில்லியன் ஏற்பாடுகள் செயல்

நடவடிக்கைத்திட்டத்தில் காணப்படும் ஏனைய கருமங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் கைவிடல்**

அம்பாறை மாவட்டத்தில் 30 முறையற்ற விற்பனையாளர்களுக்காக வியாபார குடில்கள் நிர்மாணித்தல், லாஹுகல அதிகாரப் பிரதேசத்தில் பயன்பெறுவோருக்காக மாடுகள் வழங்குதல் மற்றும் புலுன்கஸ் மூலம் நீர் கிணற்றை மறுசீரமைத்தல் ஆகிய கருமங்களுக்காக முறையே ரூபா 3,000,000 ரூபா 1,750,000 மற்றும் ரூபா 250,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்த போதிலும், நிதியம் கிடைக்காமை மற்றும் மேற்பார்வை மேற்கொள்ளப்படாமை ஆகிய காரணங்களினால் இந்த செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

**(இ) செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாமல் கைவிடல்**

அம்பாறை மாவட்டத்தில் கழபெனிபெத்த முன்பள்ளி கட்டிடம் நிர்மாணித்தல், வராபிட்டிய வித்தியாலயத்தில் விளையாட்டுத் திடல் அபிவிருத்தி மற்றும் மரண உதவி கட்டிடம் நிர்மாணித்தல் மற்றும் மரங்கல சனசமூக நிலையம் நிர்மாணித்தல் ஆகிய கருமங்களுக்காக 2014 ஆண்டின் போது முறையே ரூபா 100,000 ரூபா 191,304 ரூபா 980,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்த போதிலும், கட்டுநிதி கிடைக்காமை மற்றும் ஒப்பந்த வேலைகள் உரிய முறையில் மேற்பார்வை மேற்கொள்ளப்படாமை ஆகிய காரணங்களினால் இந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

**(ஈ) செயற்திட்டங்கள் நிறைவேற்றுதல் தாமதம்**

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சினால் அக்கறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு விஷேட செயற்திட்ட அபிவிருத்திக்காக வழங்கியிருந்த ரூபா 7.89 மில்லியன் இற்கான தொகை பயன்பெறுவோரை தெரிவு செய்வதில் காணப்பட்ட தாமதம் காணரமாக வருட இறுதி வரை பயன்படுத்தியிருக்கவில்லை.

**(உ) பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்படுத்தப்படாத செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 ஆண்டின் போது சம்மாந்துறை மற்றும் நாவிதன்வேலி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களில் பயன்பெறுவோர் 44 மற்றும் 650 பேர்களுக்காக முறையே ரூபா 1,900,000 தொகை மற்றும் ரூபா 1,493,500 இற்கான கிரயமொன்று மேற்கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த 02 நீர் செயற்திட்டங்களை கணக்காய்வுத் திகதியாகிய 2018 மே மாதம் அளவிலும் செயற்படுத்தி பூர்த்தி செய்திருக்கவில்லை. அதன் காரணத்தினால் அப் பிரதேசங்களின் அடிப்படை தேவை ஒன்றான குடிநீர் வழங்கும் தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) நாவிதன்வேலி பிரதேச செயலகத்தினால் 2016 ஆண்டின் போது இரண்டு பயன்பெறுவோருக்கு நீர் வழங்களல் வழங்குவதற்காக ரூபா 17,820 இற்கான தொகையொன்று நீர்வழங்கள் மற்றும் வடிகால் அமைப்பு சபைக்கு செலுத்தியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2018 மே 25 திகதி அந்த நலன்பெறுவோர் இருவருக்கும் நீர் வசதிகள் வழங்கியிருக்கவில்லை.

## 2.4 பெறுகை செய்முறையினூடாக வழங்கல்கள் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

2017 ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் தேறிய ஏற்பாடுகள் ஒதுக்கியதன் மூலம் செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 89.07 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 88.89 மில்லியனிற்கான ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருநதது. அது தவிர வரிசை அமைச்சின் மூலம் ரூபா 2,222 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் பல்வேறு செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்தது. இந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதற்காக கடைபிடிக்கப்பட்ட பெறுகை செய்முறை தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு ஆகும்.

(அ) பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 3.9.1 இன் பிரகாரம் சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு ஒப்பந்த வேலைகள் வழங்குவதற்கு முன்னர் குறிப்பிட்ட அமைப்புக்கள் விதிக்கப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளனவா என உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமெனினும் அவ்வாறு உறுதிப்படுத்தாமல் பதியதலாவ மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலகங்களினால் 31 சங்கங்களுக்கு கூட்டுத்தொகை ரூபா 31 மில்லியனிற்கான ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 6.3.3(ஆ) இன் பிரகாரம் விலைமனு திறக்கும் போது விலைமனு சமர்ப்பித்திருந்த விலைமனு தாரர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் பங்குபற்ற வேண்டுமெனினும், அவ்வாறு பங்குபற்றாமல் இறக்காமம், சம்மாந்துறை மற்றும் உஹன பிரதேச செயலகங்களினால் ரூபா 4.25 மில்லியனிற்கான 03 ஒப்பந்தவேலை வழங்கப்பட்டிருந்தன.

(இ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.9.1 பிரகாரம் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றிற்காக ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கியிருந்த ஒப்பந்த வேலைகளின் பெறுமதி ரூபா 2 மில்லியன் தொகை எனினும் சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் ஒரு சங்கத்திற்கு ரூபா 3 மில்லியன் தொகைக்கான ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டிருந்தன.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) வாகனப் பயன்பாடு**

---------------------------------

மாவட்ட செயலகத்திற்கு சொந்தமாகக் காணப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றிற்காக 2017 ஆண்டின் போது சாரதி சம்பளம் மற்றும் படிகள் தவிர திருத்தச் செலவுகள் என ரூபா 22,350 தொகை செலவு ஒன்று மேற்கொண்டிருந்த போதிலும் நிர்வாக உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தியவாறு ஆண்டின் போது ஒரு கிலோ மீற்றர் ஏனும் ஓட்டப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

**(ஆ) விளைவற்ற சொத்துக்கள்**

-------------------------------------------

தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டவாறு விளைவற்றுக் காணப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(i) கிழக்கு மாகாண சபை மீள்குடியேற்ற அமைச்சின் மூலம் 2016 ஆண்டின் போது ரூபா 10.6 மில்லின் பெறுமதியில் நிந்தவூர் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஆயுள்வேத கட்டிடம் கணக்காய்வுத் திகதியாகிய 2018 ஜனவரி வரை 02 வருடங்களை அண்மித்த காலம் விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) அட்டாளைச் சேனை பிரதேச செயலக பிரதேசத்தில் நொரைச்சோலை வீடமைப்பு திட்ட காணியில் (King Abdullah Model Town) நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்கு பொருத்துவதற்காக பெற்றிருந்த மின்சார உபகரணங்கள் மற்றும் குளியலறை விடயங்கள் பொருத்தப்படாமல் சுமார் 07 வருட காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

(iii) கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சினால் சிறிய ஆடைத் தொழிலச்சாலைகள் ஆரம்பிப்பதற்காக 06 மாதகாலம் பயிற்சியொன்று வழங்குவதற்காக 05 பிரதேச செயலகங்களுக்கு 2017 ஆகஸ்ட் மாதத்தில் ரூபா 3,795,934 தொகை பெறுமதியான இயந்திர உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், 2018 ஏப்ரல் அளவில் அவ் இயந்திர உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------

மாவட்ட செயலகத்தினால் அணுகியிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறைசார் தன்மை இன்றியவையாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான பல சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------------------------------------------------

மாவட்ட செயலகத்தினால் போதிய அதிகாரம் இன்றி பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(i) மாவட்ட செயலாளரினால் 2017 ஆண்டிற்கான சாட்டப்பட்டிருந்த அதிகாரத்தின் படி பிரதேச செயலாளர் ஒருவருக்கு உச்ச அளவில் கொள்வனவு செய்யக் கூடிய இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 1 மில்லியன் தொகை எனினும், பொத்துவில் பிரதேச செயலகத்தினால் அதற்கு முரணாக ரூபா 1,479,789 தொகை பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,000,000 இற்கான பெறுமதிக்கு 18 காசோலைகள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அற்காக செலுத்த வேண்டிய மீதித் தொகையாகிய ரூபா 479,789 தொகை 2017 அக்தோபர் 07 திகதி அளவிலும் செலுத்தியிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் மாவட்ட செயலாளரினால் பிரதேச செயலாளருக்கு சாட்டப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், பிரதேச பெறுகை குழுவிற்கு இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான உச்ச மட்ட வரையறை ரூபா 1 மில்லியன் எனினும், தெஹிஅத்த கண்டிய மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலங்களினால் முறையே மூன்று சந்தர்ப்பங்களில் மற்றும் ஒரு சந்தர்ப்பத்தில ரூபா 1 மில்லியன் தொகையை மிகைத்து கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) அரசுக்கு சொந்தமான காணி ஒன்றில் ஏதேனும் ஒரு நிர்மாண வேலை ஒன்று செய்வதற்கு முன்னர் அந்த காணி அமைந்துள்ள பிரதேச செயலாளரின் மூலம் காணியை உரித்தாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், அதற்கு முரணாக 2015 ஆண்டின் போது கிழக்கு மாகாண மருத்துவ திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 10.6 மில்லியன் ஏற்பாடுகளின் கீழ் நிந்தவூர் பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் ஆயுள்வேத கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

## 2.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வளிப்பு அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட நீர் செயற்திட்டங்கள் இடம்பெயர்ந்த மற்றும் மீள்குடியேற்றப்பட்ட பிரதேச மக்களுக்காக செயற்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் அதற்கு முரணாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தினால் பிரதேசத்தில் அரச நிறுவனங்களில் கடமையாற்றும் மற்றும் இடம்பெயறாத 08 உத்தியோகத்தர்களுக்கு இந்த செய்றதிட்டத்தின் கீழ் நீர் வழங்குவதற்காக ரூபா 442,832 இற்கான தொகையொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக இடம்பெயர்ந்த 08 பேருக்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த நலன்களை பெறுவதை இழந்துள்ளது.

## 2.8 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வுப் பந்திகள்

மாவட்ட செயலகம் தொடர்பாக கடந்த ஆண்டுகளின் கணக்காய்வுத் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் அடங்கியிருந்த கணக்காய்வுப் பந்திகளின் மூலம் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் தொடர்பாக திணைக்களத்தினால் சரிசெய்திருக்காத பந்திகளுடன் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2015 | 3.6(ஆ) i | மஹாஓயா அதிகாரப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப் பட்ட களுபெலிபத்த முன்பள்ளி கட்டிடம் மற்றும் மரண உதவி சங்க கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமை. |
| 2015 | 3.6(ஆ) iii | மஹாஓயா அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வராப்பிடிய வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் அலுவல்களை பூர்த்தி செய்யாமை. |
| 2015 | 3.6(ஆ) iv | பதியதலாவ அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள மறங்கல சனசமூக நிலையத்தின் நிர்மாண வேலை பூர்த்தி செய்யாமை. |
| 2016 | 3.2.1(அ) i | நாவிதன்வேலி மற்றும் ஆலயடிவேம்பு பிரதேச செயலகங்களினால் 79 மாடுகள் கொள்வனவு செய்வதற்காக மிகையாக செலுத்தியிருந்த தொகை ரூபா 3,860,500 இற்கான தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்காமை. |
| 2016 | 3.15 | தாபனக்கோவைக்கு முரணாக பொதுவில் பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் அவரது இணை கடைஒன்று நடாத்துதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்காமை. |

## 2.9 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) சிறைச்சாலைகள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட நீர் செயற்திட்டத்தின் கீழ் சமுர்த்தி நலன்பெறுவோருக்கு சலுகை அடிப்படை

மதிப்பீடு ஒன்றின் கீழ் புதிய நீர்த்தொடர்புகள் வழங்கப்பட வேண்டுமெனினும், அதற்கு முரணாக சம்மாந்துறை பிரதேச செயலக பிரதேசத்தில் 17 சமூர்த்தி நலன்பெறுவோருக்கு சமூர்த்தி நலன்பெறுவோர் அல்லாதவர்கள் என கணித்து சலுகை அடிப்படையில் அல்லாத மதிப்பீட்டின் படி நீர் தொடர்பு வழங்கப்பட்டிருந்தது.

(ii) கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின ஏற்பாடுகளின் பிரகாரம் தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்தி செய்வதற்காக உஹன பிரதேச செயலகத்திற்கு ரூபா 1,071,669 வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றில் ரூபா 101,857 இற்கான தொகை நலன்பெறுவோருக்காக செலவிடப்படாமல் அமைச்சுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தமையினால் எதிர்பார்த்த விளைவுகளை நெருங்குவதற்கு முடியாதிருந்தது.

(iii) தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டு அமைச்சினால் செயற்படுத்திய சீவனோபாய உதவி செயற்திட்டத்தின் கீழ் 98 நலன்பெறுவோருக்கு பயிற்சி வழங்குவதற்காக ரூபா 47,000 இற்கான தொகையொன்று சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்கு கிடைத்திருந்த போதிலும், 2018 மார்ச் 22 திகதி வரை அப் பயிற்சியினை வழங்கியிருக்கவில்லை.

(iv) சிறைச்சாலைகள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சினால் நீர் வசதிகள் வழங்கும் செயற்திட்டத்திற்காக வழங்கியிருந்த முழுத்தொகையும் நலன்பெறுவோருக்காக செலவிடப்பட வேண்டுமெனினும் மஹாஓயா பிரதேச செயலகத்தினால் ரூபா 183,610 தொகையொன்று அவ்வாறு செலவிடப்படாமல் திருப்பி, அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு தயாரித்தல் அவ்வக் காலங்களில் மேற்கொள்ளப்படாமையால் எதிர்பார்த்த விளைவுகள் நெருங்குவதற்காக முடியாதிருந்தது.

(v) இறக்காமம் பிரதேச செயலகத்திற்கு நலன்பெறுவோருக்கு பயிற்சி வழங்குவதற்காக ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு ரூபா 7,275 வீதம் 12 கிராம சேவகர் பிரிவுக்கு ரூபா 87,300 இற்கான ஏற்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் அவற்றில் ரூபா 52,745 இற்கான தொகை பயிற்சிக்காக செலவிடப்படாமல் மீண்டும் அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 2.10 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 673,687,000 | 672,588,832 | 1,098,168 | 0.16 |
| | மூலதன | 710,000 | 709,470,599 | 529,402 | 0.07 |
| | **மொத்தம்** | **1,383,687,000** | **1,382,059,431** | **1,627,570** | **0.11** |
| 2014 | மீண்டுவரும் | 654,795,000 | 654,769,799 | 2,520 | 0.00 |
| | மூலதன | 401,200,000 | 400,960,068 | 239,932 | 0.05 |
| | **மொத்தம்** | **1,055,995,000** | **1,055,729,867** | **242,452** | **0.02** |
| 2015 | மீண்டுவரும் | 778,251,000 | 778,250,111 | 889 | 0.00 |
| | மூலதன | 64,000,000 | 63,999,979 | 21 | 0.00 |
| | **மொத்தம்** | **842,251,000** | **842,250,090** | **910** | **0.00** |
| 2016 | மீண்டுவரும் | 886,000,000 | 859,738,743 | 26,261,257 | 0.29 |
| | மூலதன | 77,000,000 | 76,878,237 | 121,763 | 0.15 |
| | **மொத்தம்** | **963,000,000** | **936,616,980** | **26,383,020** | **2.73** |
| 2017 | மீண்டுவரும் | 884,640,000 | 795,587,249 | 89,052,751 | 10.06 |
| | மூலதன | 86,000,000 | 85,998,582 | 1,418 | 0.00 |
| | **மொத்தம்** | **970,640,000** | **881,585,831** | **89,054,169** | **9.17** |

**ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கிய ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

மீளாய்வாண்டின் போது 11 ஏனைய அமைச்சுக்களினால் பல்வேறு கருமங்களுக்காக ரூபா 2,222 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது. வருட இறுதி அளவில் அவற்றில் ரூபா 1,969 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கியிருந்த ஏற்பாடுகளில் இருந்து ரூபா 253 மில்லியன் அதாவது 11 சதவீதம் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**2.10.1 தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

(அ) கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட நிர்மாணவேலை செயற்திட்டம் மற்றும் ஜீவனோபாய உதவி செயற்திட்டத்தின் கீழ் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) லாஹுகல பிரதேச செயலகத்தினால் மேற்கூறிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஹுலங்நுகே கிராம சேவை பிரிவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த விவசாய கிணறுகள் தொடர்பாக பௌதீக பரிசோதனையின் போது நிர்மாணவேலை பூர்த்தி செய்திருந்த மட்டத்தில் இருந்து 6.25 மீற்றர் ஆழத்திற்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமெனினும், 9.11 மீற்றர் ஆழத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக நிர்மாணவேலை மேற்கொள்ளப்படாத 3.15 மீற்றர் ஆழத்திற்காக ரூபா 133,904 இற்கான தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மேற்கூறிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 02 கிராம சேவை பிரிவினை இணைத்து மேற்கொண்டிருந்த மதகு புனரமைக்கும் செயற்திட்டம் தொடர்ாக தயாரித்திருந்த மதிப்பீட்டில் விடய இலக்கம் 07 இன் பிரகாரம் $10m^3$ கொங்கிரீட் போடுவதற்காக ஆலயடிவேம்பு பிரதேச செயலத்தினால் ரூபா 185,300 செலுத்தியிருந்தது. எனினும் பௌதீக பரிசோதனையின் போது கண்டறியப்பட்டிருந்தவாறு பூர்த்தி செய்திருந்த $6.35m^3$ என உறுதிப்படுத்தப்பட்டதினால் ரூபா 77,350 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மேற்கூறிய நியதிச் சட்டத்தின் கீழ் ஒரு கிராம சேவை பிரிவுக்கு கிடைக்கும் ஏற்பாடுகள் குறிப்பிட்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் ஒப்பந்தவேலைகள் மற்றும் சீவநோபாய வசதிகள் நிகழ்ச்சித் திட்டம் ஆகிய இரண்டு கருமங்களும் நிறைவேறும் விதத்தில் பயன்படுத்த வேண்டுமெனினும், அதற்கு முரணாக ஆலயடிவேம்பு பிரதேச செயலகத்தினால் 21 கிராமசேவகர் பிரிவுகளுக்காக ரூபா 11 மில்லியன் மொத்தத் தொகையும் ஒப்பந்த வேலைகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iv) சிறு மற்றும் மத்திய அளவினதான தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி செய்வதற்காக தேவையான இயந்திரங்கள் மற்றும் மெஷின்கள் கொள்வனவு செய்யும் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் 05 கூறுவிலைகள் அழைக்கப்பட்டு பொருத்தமான விலை ஒன்று தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறாயினும், பொத்துவில் பிரதேச செயலகத்தினால் அதற்கு முரணாக ஒரு தனியார் நிறுவனம் ஒன்றிற்காக மாத்திரம் கூறுவிலைகள் அழைக்கப்பட்டு ரூபா 1,479,789 இற்கான பெறுமதியான 53 மெஷின்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(v) பொத்துவில் பிரதேச செயலகத்தினால் மேற்கூறிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்திருந்த மெஷின்களுக்காக உரிய கூறுவிலைகள் தொடர்பான விபரங்கள் தொடர்பாக கணக்காய்வின் போது நேரடியாக வழங்குனர்களிடம் பெற்றிருந்ததுடன், அந்த கூறுவிலைகளின் பிரகாரம் 53 மெஷின்களுக்காக ரூபா 1,404,750 தொகை செலுத்த வேண்டியிருந்த போதிலும் ரூபா 1,479,789 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 75,039 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(vi) அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துவத்றகு முன்னர் குறிப்பிட்ட காணியின் தெளிவான உரிமை தொடர்பாக உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனினும், இறக்காமம் பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றப்பட்ட ரூபா 1,463,864 இற்கான அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பான காணியின் உரிமை உறுதிப்படுத்துவதற்காக தேவையான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(vi) இந்த செயற்திட்டத்தின் கீழ் நலன்கள் வழங்குவதற்கு தெஹிஅத்தகண்டிய பிரதேச செயலகத்தினால் 80 நலன்பெறுவோருக்கு அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த சுற்றறிக்கையின் விவரக்குறியீடுகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்டது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நலன்பெறுவோர் தெரிவு செய்யப்பட்ட முறை தொடர்பான சாட்சிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஆ) பன்முகப்படுத்தப்பட்ட நிதியங்களின் கீழ் செயற்படுத்திய செயற்திட்டங்கள்**

2017 ஆண்டின் மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று அதிகாரப் பிரதேசத்தில் விளையாட்டு மைதானம் ஒன்று அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 500,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. சரியான முறையில் சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்படாமல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 223,373 இற்கான பெறுமதியில் குறிப்பிட்ட அபிவிருத்தி அலுவல்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்ட பின்னர் செயற்திட்டம் இடை நிறுத்தப்பட்டிருந்தது.

### 2.10.2 கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

மேற்கூறிய அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஊழியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு சிறிய புடவை தொழிற்சாலைகள் ஆரம்பிக்கும் செயற்திட்டம்**

(i) மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் 6 மாதங்களுக்கான பயிற்சி வழங்குவதற்காக 5 பிரதேச செயலகங்களுக்கு ரூபா 4,254,960 இற்கான பெறுமதியுடைய இயந்திர உபகரணங்கள் 2017 ஆகஸ்ட் மாதம் அளவில் வழங்கியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2018 மே வரை 08 மாதங்கள் கடந்துள்ள போதிலும் குறிப்பிட்ட குறிக்கோளுக்காக அவை பயன்படுத்தியிருக்கவில்லை.

(ii) மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் 06 மாத காலப்பகுதிக்காக அதன் ஆசிரியர் மற்றும் காவலாளர் சம்பளம் செலுத்துவதற்காக பதியதலாவ பிரதேச செயலகத்திற்கு ரூபா 365,000 வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 293,833 தொகை குறிப்பிட்ட குறிக்கோள்களுக்காக பயன்படுத்தப்படாமல் அமைச்சுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

**(ஆ) தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபையினால் செயற்படுத்தப்பட்ட விஷேட தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்**

---

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 38,684,782 இற்கான தொகையொன்று இந்த அமைச்சினால் மாவட்ட செயலகத்திற்கு அறிவிக்காமல் 13 பிரதேச செயலகங்களின் வங்கிக் கணக்குகளுக்கு வைப்புச் செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் இந்த செய்திட்டத்தை செயற்படுத்தும் போது திட்டமிடல், முதன்மை அளிக்கப்பட வேண்டியவற்றை இணங்காணல் மற்றும் நிதியம் நியாயமாக பகிரப்படல் ஆகிய தேவைகள் உரிய முறையில் பூர்த்தி செய்யாமல் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதற்காக இனங்காணப்பட்ட அவதானிப்புக்கள் கீழ்வருமாறு

(i) மேற்கூறிய செயற்திட்டத்திற்காக நலன்பெறுவோர்கள் தெரிவு செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட அடிப்படையில் சரியான நடைமுறை ஒன்றின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், அதற்கு முரணாக பிரதேச செயலகத்தின் கடமையில் ஈடுபடாத பல்வேறு நபர்களினால் 8 பிரதேச செயலகங்களில் 1601 நலன்பெறுவோருக்காக ரூபா 33,058,330 தொகை பெறுமதியான பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டு ரூபா 18,065,865 தொகை பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) இந்த செய்முறையின் மூலம் கொள்வனவு செய்திருந்த பண்டங்கள் ரூபா 10,465,375 இற்கான பெறுமதியுடைய பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் குறிப்பிட்ட நலன்பெறுவோருக்கு வழங்கப்படாமல் 04 மாதங்களுக்கு அண்மித்த காலம் விளைவற்றுக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

### 2.10.3 தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்

---

இந்த அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட சீவனோபாய உதவி செயற்திட்டத்தின் கீழ் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழ்வருமாறு

(i) இந்த அமைச்சின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் நலன்பெறுவோருக்கு வினியோகிப்பதற்காக ஆடுகள் கொள்வனவு செய்த போது 1985 இன் 29 இலக்க மிருக சட்டத்தின் படி மிருக வைத்தியரிடம் மிருகங்களின் சுகாதார நிலைமை தொடர்பாக சான்றிதழ் ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும், அதற்கு முரணாக ரூபா 3,916,200 பெறுமதியான 314 ஆடுகள் கொள்வனவு செய்து வினியோகித்திருந்ததுடன் பௌதீக பரிசோதனையின் போது ரூபா 286,200 பெறுமதியான 30 ஆடுகள் இறந்திருந்தன.

(ii) மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் சாய்தமருது பிரதேச செயலகத்தினால் ரூபா 135,000 தொகை பெறுமதியான உபகரணங்கள் வினியோகிப்பதற்கு ஆரம்பத்தில் முதலில் தெரிவு செய்யப்பட்ட 15 நலன்பெறுவோரினால் குறிப்பிட்ட உபகரணங்கள் தேவையில்லை என கூறியதினால் வேறு 15 நலன்பெறுபோருக்கு இந்த உபகரணங்களை வினியோகிக்கப்பட்டிருந்தது. அதன்

காரணமாக நலன்பெறுவோர்களை தெரிவு செய்தல் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நடைமுறை முறையற்றது என அவதானிக்கப்பட்டது.

(iii) இந்த செயற்திட்டத்தின் கீழ் ஆலயடிவேம்பு பிரதேச செயலகத்தினால் 10 நலன்பெறுவோருக்கு வினியோகிப்பதற்காக ரூபா 975,650 தொகை செலவிடப்பட்டு 40 ஆடுகள் கொள்வனவு செய்திருந்தது. பௌதீக பரிசோதனையின் போது ஒரு நலன்பெறுவோருக்கு வழங்கியிருந்த ரூபா 97,565 பெறுமதியான 04 ஆடுகள் நலன்பெறுவோரிடம் காணப்படவில்லை.

(iv) அக்கறைப்பற்று பிரதேச செயலகத்தினால் 2017 ஆண்டின் போது சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வமைப்பு அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,559,030 பெறுமதியான பண்டங்கள் மற்றும் உபகரணங்களுக்காக ஒரே காசோலையின் மூலம் கொடுப்பனவு செய்வதற்குப் பதிலாக 11 காசோலைகளின் மூலம் வெவ்வேறான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் செலவு வரையறையை மிகைத்தலை தடுக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 2.10.4 கிழக்கு மாகாண கல்வி, தகவல்கள், தொழிநுட்பம், முன்பள்ளி கல்வி, விளையாட்டுத் துறை, பண்பாட்டு அலுவல்கள், இளைஞர் விவகார மற்றும் புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள் குடியேற்றம் அமைச்சின் ஏற்பாடுகள் பயன்படுத்துதல்

---

இந்த ஏற்பாடுகளின் கீழ் திருக்கோவில் பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்ட மாகாண விஷேட அபிவிருத்தி மானிய செயற்திட்டம் (PODG) தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் கன்சிகுடிச்சி ஆறு பிரதேசத்தில் 75 நலன்பெறுபோருக்கு மணல் வழங்குவதற்காக ரூபா 436,875 இற்கான காசோலை ஒன்றும் பிரதேச செயலகத்தினால் 2016 திசெம்பர் 07 திகதி ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், குறிப்பிட்ட மணல் வழங்கப்படாமல் அந்த காசோலையை 2017 ஏப்ரல் 17 ஆம் திகதி காசாக்கியிருந்தது. எனினும் நலன்பெறுவோருக்கு மணல் வழங்கப்படாமல் 02 மாதங்களுக்கு பின்னர் கணக்குகளுக்கு குறிப்பிட்ட பணம் வைப்பு செய்திருந்தமையால் ஒப்பந்தக்காரருக்கு அப்பணத்தை முறைகேடாக பயன்படுத்துவதற்கு வழிவகுக்கப்பட்டிருந்தது.

(ii) மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் தங்கவேலாயுபுரம் பிரதேசத்தில் 126 பயன்பெறுவோர்களுக்காக வழங்கியிருந்த 252 மணல் கியூப் (டிரக்டர்) இற்காக செலுத்த வேண்டிய தொகை 376,640 தொகை எனினும், 492 மணல் லோட்களுக்காக ரூபா 734,025 தொகையொன்று செலுத்தியிருந்தமையினால் மணல் கியூப்கள் (டிரக்டர்) 240 இற்காக ரூபா 357,385 தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

### 2.10.5 சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் ஏற்பாடுகள் பயன்படுத்துதல்

---

இதன் கீழ் பிரதேச செயலகங்களினால் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி அலுவல்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு ஆகும்.

**(அ) குடிநீர் கிணறுகள் நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

---

(i) மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் சம்மாந்துறை மற்றும் லாஹுகல பிரதேச செயலகத்தினால் 2017 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த 09 கிணறுகளுக்காக மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 1,427,640 தொகை செலுத்தப்பட வேண்டும் எனினும் அதற்காக ரூபா 2,406,317 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த காணரத்தினால் ரூபா 978,667 இற்கான தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் 2016 ஆண்டிற்கான ஏற்பாடுகளின் கீழ் திருக்கோவில் அதிகாரப் பிரதேசத்தில் ரூபா 4,160,000 இற்கான பெறுமதிக்கு 20 குடிநீர் கிணறுகள் நிர்மாணிக்கும் போது மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு ஒரு கிணற்றின் ஆழம் 7.6 மீற்றர்கள் மற்றும் அகலம் 2.4 மீற்றர்களாக இருக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், நிர்மாணிக்கப்பட்ட 20 கிணறுகளில் காணப்பட்ட ஆழம் மற்றும் அகலம் மதிப்பீட்டுத் தொகையை விட மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு கிணறு நிர்மாணிப்பதற்காக ரூபா 300,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்த போதிலும் திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் ஒரு கிணறு நிர்மாணிக்கப்பட வேண்டிய பெறுமதி ரூபா 80,000 தொகை என 05 அத்தியவசியமான பகுதிகளை அகற்றி மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 1.6 மில்லின் தொகை பயன்படுத்தப்படாதிருந்ததுடன், நிர்மாணிக்கப்பட்டிருந்த 20 கிணறுகள் நிர்மாண வேலைகள் குறிப்பிட்ட நியமத்தின் படி இன்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வீடுகள் நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

---

அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த MR/4/1 இலக்க சுற்றறிக்கையின் 3.4 பந்தியின் பிரகாரம் வீடு ஒன்று நிர்மாணிப்பது தொடர்பான ஒவ்வொரு தவணைப் பணம், வீடு மற்றும் உடல் ஆரோக்கிய அலகு இரண்டினதும் வேலை சமமாக நிர்மாணித்தல் தொடர்பாக கவனம் செலுத்தி வழங்க வேண்டும். அவ்வாறாயினும், நாவிதன்வேலி மற்றும் ஆலயடிவேம்பு பிரதேச செயலகங்களினால் உடன் ஆரோக்கிய அலகின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத போதிலும் 06 பயன்பெறுவோருக்கு 03 தவணைகள் என ரூபா 4,200,000 தொகை வழங்கியிருந்தது.

**(இ) உடல் ஆரோக்கிய அலகுகள் நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

---

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு ஆகும்.

(i) மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் உடல் ஆரோக்கிய அலகுகள் நிர்மாணித்தல் இடம் பெயர்ந்த மக்களை குறிப்பிட்ட பிரதேசங்களில் மீள்குடியேற்றிய பின்னர் மேற்கொள்ளவேண்டியிருந்தது. எவ்வாறாயினும், சம்மாந்துறை பிரதேச செயலகம் 2016 ஆண்டின் போது மக்களை

மீள்குடியேற்றாமல் 16 பயன்பெறுவோருக்காக ரூபா 871,039 தொகை செலவிடப்பட்டுள்ள உடல் ஆரோக்கிய அலகு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், கணக்காய்வுத் திகதியாகிய 2018 மார்ச் மாதம் அளவிலும் இந்த உடல் ஆரோக்கிய அலகுகள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) உடல் ஆரோக்கிய அலகு நிர்மாணித்தல் தொடர்பாக குறிப்பிட்ட காணிகளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் பிரதேச செயலகத்தினால் கணக்காய்விற்கு கேட்டிருந்த போதிலும், சம்மாந்துறை பிரதேச செயலகத்தினால் அவை வழங்கியிருக்காமையால் காணிகளின் உரிமையை கணக்காய்வில் உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

**(ஆ) ஜீவனோபாய உதவி நிகழ்ச்சித் திட்டம்**

-----------------------------------------------------------------

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

(i) இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலகத்தினால் 06 பயன்பெறுவோருக்கு ஒன்று ரூபா 38,500 வீதம் 06 தராசுகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 231,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், இந்த பிரதேச செயலகத்திற்கு அண்மையில் இருக்கும் அட்டாளைச் சேனை பிரதேச செயலகத்தினால் மேற்கூறிய தராசு ஒன்றின் விலை ரூபா 23,750 வீதம் கொள்வனவு செய்திருந்தது. இதன் பிரகாரம் 06 தராசுகளுக்காக சுமார் ரூபா 88,500 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ii) இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திருக்கோயில் பிரதேச செயலகத்தினால் 28 பயன்பெறுவோருக்கு ஆடுகள் கொள்வனவு செய்து வினியோகிப்பதற்காக ரூபா 489,300 தொகை செலவிடப்பட்டிருந்தது. பயன்பெறுவோர் சிலருக்கு கொடுத்திருந்த ஆடுகளை பௌதீக ரீதியாக பரிசோதனை செய்த போது ஒரு பயன்பெறுவோருக்கு வழங்கியிருந்த சுமார் ரூபா 100,000 தொகை பெறுமதியான 06 ஆடுகள் பயன்பெறுவோரிடம் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(iii) இந்த ஆடுகளை கொள்வனவு செய்த போது பெறுகை தீர்மானத்தின் பிரகாரம் கொள்வனவு செய்ய வேண்டியது ஜமுனா கலவை ஆடுகள் எனினும், அதற்கு பதிலாக உள்நாட்டு ஆடுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அண்மையிலுள்ள பிரதேச செயலகத்தினால் இந்த உள்நாட்டு ஆடுகள் கொள்வனவு செய்வதற்காக செலுத்தியிருந்த கூறுவிலையுடன் இணக்கஞ் செய்த பொது திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் ஆடுகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 117,950 இற்கான தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(iv) பயன்கள் வழங்கும் போது செயற்திட்டத்தை வெற்றிகரமாக நடாத்திச் செல்லக் கூடிய விதமாக சரியான முறையில் பயன்பெறுவோரை தெரிவு செய்ய வேண்டுமெனினும் நாவிதன்வேலி பிரதேச செயலகத்தினால் 90

வயதை உடைய பயன்பெறுவோர் ஒருவருக்கு ரூபா 28,380 பெறுமதியான 90 கோழிக்குஞ்சுகள் வழங்கியிருந்ததுடன் 2018 மே 25 திகதி அளவில் 75 கோழிக்குஞ்சுகள் இறந்திருந்தன.

(v) இந்த செயற்திட்டத்தின் கீழ் நாவிதன்வேலி பிரதேச செயலகத்தினால் ஒரு நலன்பெறுவோருக்கு வழங்கியிருந்த ரூபா 42,500 இற்கான இயந்திரமொன்று 2018 மே 25 திகதி அளவிலும் பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டது. அதே போல் இந்த பயன்பெறுவோருக்கும் வழங்கியிருந்த மற்றும் ஏனைய பயன்பெறுவோருக்கு ரூபா 66,000 பெறுமதியான 02 தண்ணீர் பம்புகள் காணாமல் போயுள்ளன என அவதானிக்கப்பட்டது.

**2.10.6 மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு**

---

மேற்கூறிய அமைச்சினால் பிரதேச செயலகங்களில் செயற்படுத்திய செயற்திட்டம் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழ்வருமாறு

(i) பொதுவில் பிரதேச செயலகத்தினால் செயற்படுத்திய கர்ப்பிணித் தாய்மாருக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக வெளியிட்டிருந்த சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 2,000 இற்கான பெறுமதிக்கு வழங்கப்படும் பண்டங்களுக்காக பயன்பெறுவோருக்கு சிட்டை ஒன்று வழங்க வேண்டும். எனினும் தெரிவு செய்யப்பட்ட 03 வழங்குனர்களினால் குறிப்பிட்ட பண்டங்களுக்காக சிட்டைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பொதுவில் பிரதேச செயலகத்தினால் வழங்குனர்களுடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு வினியோகிக்கும் பண்டங்கள் தொடர்பாக அவை வினியோகிக்க முன்னர் பிரதேச சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் மற்றும் மக்கள் சுகாதார பரிசோதகர்களினால் பண்டங்கள் தொடர்பான விதப்புரை வழங்கப்பட வேண்டுமெனினும் 2018 செப்தெம்பர் 30 வரை இந்த செய்முறையை கடைபிடித்திருக்கவில்லை.

**2.11 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

---

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

---

மாவட்ட செயலகத்தின் 27001 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | பெறுவனவுகள் | வரவு மீதி |
|---|---|---|

| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
|---|---|---|---|---|---|
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 70.00 | 72.18 | 48.00 | 52.66 | 240.00 | 171.78 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஊழியர்களின் மீதிகள் தவிர ரூபா 350,290 தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதி 08 மாதங்கள் முதல் 10 மாதங்கள் வரையான காலவீச்சில் காணப்பட்ட போதிலும் அந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக இயலாதுள்ளது.

## 2.12 கட்டுநிதி கணக்கு

மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் தயாரித்திருந்த கட்டுநிதி மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்தம் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டுநிதிகள், மாதாந்தம் விண்ணப்பித்த கட்டுநிதிகள் மற்றும் பெற்றிருந்த கட்டுநிதிகள் தொடர்பாக விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

| மாதம் | விண்ணப்பித்த கட்டுநிதி | கிடைத்திருந்த கட்டுநிதி | விண்ணப்பித்த கட்டுநிதி மற்றும் கிடைத்திருந்த கட்டுநிதி இடையே வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| ஜனவரி | 180,119,000 | 133,119,000 | 47,000,000 |
| பெப்ரவரி | 148,619,000 | 200,425,000 | (51,806,000) |
| மார்ச் | 101,619,000 | 144,425,000 | (42,806,000) |
| ஏப்ரல் | 280,000,000 | 169,068,000 | 110,932,000 |
| மே | 311,100,000 | 234,868,000 | 76,232,000 |
| ஜூன் | 476,000,000 | 187,068,000 | 288,932,000 |
| ஜூலை | 579,462,000 | 261,318,000 | 318,144,000 |
| ஆகஸ்ட் | 544,677,000 | 231,280,000 | 313,397,000 |
| செப்தம்பர் | 250,338,000 | 236,330,000 | 14,008,000 |
| அக்தோபர் | 368,708,000 | 336,811,000 | 31,897,000 |
| நவம்பர் | 644,462,000 | 326,905,000 | 317,557,000 |
| திசெம்பர் | 674,928,000 | 616,009,000 | 58,919,000 |
| | 4,560,032,000 | 3,077,626,000 | 1,482,406,000 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவட்ட செயலகத்தினால் ஒவ்வொரு மாதத்தில் விண்ணப்பிக்கப்பட வேண்டிய கட்டுநிதி தேவை எவ்வளவு என திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(ii) திட்டமிட்டவாறு குறிப்பிட்ட காலப்பகுதியில் குறிப்பிட்ட கருமங்களை நிறைவேற்றுவதற்காக குறிப்பிட்ட காலப்பகுதிகளில் கட்டுநிதிகள் கிடைக்கப் பெறாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பின்வரும் கருமங்கள் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

| கருமங்கள் | அமைச்சு | ஏற்பாடுகள் | 2017 திசெம்பர் 31 அளவில் கிடைத்திருக்காத கட்டுநிதி தொகை |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| பாலமுனை மக்கள் விளையாட்டுத் திடல் அபிவிருத்தி | விளையாட்டுத்துறை அபிவிருத்தி அமைச்சு | 1,000,000 | 1,000,000 |
| தெஹிஅத்த கண்டிய உத்தியோகபூர்வ வாசஸ்தலம் நிர்மாணித்தல் | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 9,000,000 | 2,298,778 |

(iii) வருட ஆரம்பத்தில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்காததுடன், வருட இறுதியில் அமைச்சு மற்றும் திணைக்களங்களினால் பல்வேறு செயற்திட்டங்களுக்காக ஏற்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் கட்டுநிதி திசெம்பர் 31 திகதிகளுக்கு முன்னர் கிடைக்கப் பெறாமையினால் மொத்த ஏற்பாடுகள் ரூபா 285,060,879 தொகைக்கான செயற்திட்டத்திற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைத்திருக்காத கட்டுநிதியின் பெறுமதி ரூபா 165,212,881 தொகையாக இருந்தது. விபரங்கள் கீழ் காண்பிக்கப்படுகின்றன.

| செயற்திட்டங்களின் எண்ணிக்கை | அமைச்சு | ஏற்பாடுகள் | 2017 திசெம்பர் 31 திகதி அளவில் கிடைக்கப் பெறாத கட்டுநிதி |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| பல்வேறு செயற்திட்டங்கள் 07 | நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு | 52,310,879 | 52,310,879 |
| பல்வேறு செயற்திட்டங்கள் 08 | நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு | 55,250,000 | 55,250,000 |
| பல்வேறு செயற்திட்டங்கள் 03 | தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நல்லிணக்க அமைச்சு | 27,500,000 | 18,956,699 |

| | | | | |
|---|---|---|---|---|
| பல்வேறு செயற்திட்டங்கள் | 37 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு | 150,000,000 | 38,695,303 |
| | | | --------------------- | ------------------- |
| | | | 285,060,879 | 165,212,881 |
| | | | ========= | ========= |

## 2.13 பொது வைப்புக் கணக்கு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சினால் அக்கரைப்பற்று மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலகங்களுக்கு முறையே ரூபா 7,898,030 தொகை ரூபா 5,631,000 தொகை வழங்கியிருந்ததுடன் அந்த பணம் உரிய செய்பணிகளை நிறைவேற்றாமல் 05 மாதங்களை அண்மித்த காலம் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

## 2.14 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

கல்முனை மற்றும் லாஹுகல பிரதேச செயலகங்களின் கீழ் குறிப்பிட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறைப்படி மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| கணினி, துணைக் கருவி மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான பதிவேடு | 2002 நவம்பர் 28 திகதி IAI/2002/2 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| இழப்புகள் மீதான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| வாகனங்களை பட்டியல் படுத்தும் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647(இ) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| விலைமனு அழைப்பு பதிவேடு | அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையில் வழிகாட்டல் 5.2.1 | லாஹுகல பிரதேச செயலகத்தில் பேணியிருக்கவில்லை. |

## 2.15 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(5) | 40,000 | வேலை முடிவடைந்து 10 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டும். எனினும் கல்முனை பிரதேச செயலகத்தினால் 02 சந்தர்ப்பங்களில் 03-04 மாதங்கள் செல்லும் வரை முற்பணம் தீர்த்திருக்க வில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 137, 138 மற்றும் 139 | 1,000,000 | பண்டங்கள் அல்லது வழங்கல் பெற்ற பிணை அதற்கான காசோலைகள் மற்றும் கொடுப்பனவு செய்முறை மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு முரணாக நிந்தவூர் பிரதேச செயலகத்தினால் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு தொடர்பாக காசோலை எழுதப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் விளையாட்டு உபகரணங்கள் கணக்காய்வுத் திகதி அளவிலும் கிடைத்திருக்கவில்லை. |
| (iii) | - மேற்படி - | 958,560 | பதியதலாவ பிரதேச செயலகத்தினால் கொலமன்தலாவ நீல செவன கட்டிடத்தை நிர்மாணிக்கும் வேலை தொடர்பான நிர்மாணவேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத விடயங்கள் உட்பட மொத்த பெறுமதியாகிய ரூபா 958,560 பெறுமதிக்கு 2017 திசெம்பர் 30 எழுதப்பட்ட காசோலை 2018 மார்ச் 29 வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | நிதிப்பிரமாணம் 137, 138 மற்றும் 139 | 1,421,017 | பதியதலாவ பிரதேச செயலகத்தினால் கல்ஓடே நீலசெவன கட்டிடம் நிர்மாணப்பது தொடர்பான நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்காத கருமங்கள் உட்பட மொத்தப் பெறுமதியாகிய ரூபா 921,338 தொகை மற்றும் ரூபா 499,679 பெறுமதிக்கான 2017 திசெம்பர் 31 திகதி வழங்கப்பட்ட 02 காசோலைகள் கொடுக்கப்படாமல் 2018 மார்ச் 29 வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தது. |
| (எ) | நிதிப்பிரமாணம் 135 | 1,755,425 | மாவட்ட செயலகத்தினால் 2017 ஆண்டிற்கான வழங்கப்பட்ட அதிகாரக் கையளிப்பின் கீழ் பிராந்திய பெறுகை குழுவிற்கு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக வரையறை ரூபா 1,000,000 தொகை எனினும் அதற்கு முரணாக அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தினால் கைத்தொழில் மற்றும் வாணிப விவகார அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் ரூபா 1,755,425 இற்கான இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக பெறுகை தீர்மானம் எடுக்கப்பட்டு அந்த கொள்வனவிற்காக பெறுகை தீர்மானம் எடுக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவை<br>--------------------------------------------- | | |
| | வழிகாட்டல் 5.4.12 | 1,355,969 | செலுத்தப்படும் பெறுமதி கூட்டிய வரி தொடர்பாக விபரங்கள் தொடர்ந்து வரும் மாதத்தில் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதி ஒன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட வேண்டுமெனினும் ஆலையடிவேம்பு மற்றும் திருக்கோவில் பிரதேச செயலகங்களினால் முறையே ரூபா 854,151 மற்றும் ரூபா 501,818 பெறுமதி கூட்டிய வரி செலுத்தி இருந்த போதிலும் அது தொடர்பான விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பியிருக்கவில்லை. |

### 2.15.2 வரித் தேவைகளுக்கு இணங்கியிருக்காமை
---------------------------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெறுகை வழிகாட்டல் கோவை நியம விலைமனு பதிவேடு (SBD) 13.3 இன் பிரகாரம் விலைமனுதார்கள் பெறுமதி கூட்டியவரிக்காக பதிவு செய்திருந்தால் பெறுமதி கூட்டியவரி தொடர்பான உரிய ஆவணங்கள் விலைமனு சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே வழங்கப்பட வேண்டுமெனினும், அந்த ஆவணம் சமர்ப்பிக்கப்படாமல் இருக்கும் போது இறக்காமம் பிரதேச செயலகத்தினால் ரூபா 213,770 இற்கான பெறுமதி கூட்டிய வரி ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ii) பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் பெறுமதி கூட்டிய வரிக்காக பதிவு செய்திருக்காத மதிப்பீடுகள் தயாரிக்கும் போது பெறுமதி கூட்டிய வரியுடன் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 20 கிணறுகளுக்கான மதிப்பீடு பெறுமதி கூட்டிய வரி இன்றி சமர்ப்பித்திருந்த போதிலும் திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் ரூபா 501,818 இற்கான தொகை பெறுமதி கூட்டியவரி என ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**2.16 மனிதவள முகாமைத்துவம்**

**2.16.1 இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேற்கூறிய 2.1 பந்தியில் குறிப்பிட்டுள்ள செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான மாவட்டச் செயலகத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 691 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு ரூபா 339,744 தொகை ஆக இருந்ததுடன் குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 97 | 83 | 14 |
| (ii) | மூன்றாம் நிலை | 76 | 24 | 52 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,933 | 1,690 | 243 |
| (iv) | ஆரம்ப நிலை | 257 | 237 | 20 |
| | மொத்தம் | 2,363 | 2,034 | 329 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பதவியணி பயிற்சி வழங்கல்**

கடந்த 05 ஆண்டுகள் மாவட்ட செயலகத்திற்கு ஊழியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக ரூபா 7,350,000 தொகை ஏற்பாடுகள் கிடைத்திருந்தது. அத்துடன் மாவட்ட செயலகத்தில் மற்றும் பிரதேச செயலகங்களில் இருந்து பயிற்சி வழங்கப்படாத ஊழியர்களின் எண்ணிக்கை கடந்த 05 வருடங்களில் 396 முதல் 546 வரை வீச்சினை பெற்றிருந்தது.